# இறையியல் கோலங்கள்

வடிவம் 15 | மார்ச் 2002 | வண்ணம் 01



அ
ல்
லே
லூ
யா

குருவும்
பலிப்பொருளும்

# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# *Irai Iyal Kolangal*

*Tamil Theological Quarterly*

**VoL : 15**
**No : 01**
**March 2002**

**வடிவம் : 15**
**வண்ணம் : 01**
**மார்ச் 2002**

**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

**ஆசிரியர் :**

அருள்திரு ஜே. நீக்கிலஸ்

**துணை ஆசிரியர்கள் :**

அருள்திரு ச.வி.ப. மங்களராஜா
அருள்திரு ப. ஜோ. ஜெபரெட்ணம்

**நிர்வாகக் குழு :**

சகோ. அ.பீ. திருமகன்
சகோ. தே. செல்வரட்ணம்
சகோ. தா. நிருபன் நிஷானந்
சகோ. அ. அன்ரன் ஸ்ரீபன்
சகோ. பா. ஜோ. அன்ரனி பிறாயன்
சகோ. சு. டக்ளஸ் மில்ரன் லோகு

**வெளியீடு :**

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், இலங்கை.

(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்)

*Editor :*

Fr. J. Nicholas

*Sub Editors :*

Fr. S.V.B. Mangalarajah
Fr. P.J. Jebaratnam

*Administrative Board :*

Bro. A.P. Thirumahan
Bro. T. Selvaratnam
Bro. T. Niruban Nishonand
Bro. A. Anton Stephen
Bro. B. J. Antony Brian
Bro. S. Douglas Milton Logu

*Publication :*

St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.

Tel.No: 021-2482

# பொருளடக்கம்


பக்கம்

1. ஆசிரியரிடமிருந்து 1

2. ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வில் இயேசுவின் உயிர்ப்பு உண்டாக்கிய தாக்கம் 2
*- அருள்திரு. சாள்ஸ் கொலின்ஸ்*

3. உயிர்ப்பு மானிட விடுதலையின் கால்கோள் 6
*- அருள்திரு. அ. பி. ஜெயசேகரம்*

4. கிறிஸ்துவின் உயிர்ப்பில் அர்த்தம்பெறும் மறுவாழ்வு 12
*- அருள்சகோ. எஸ். ஜே. சி. பாஸ்கரன்*

5. திருவழிபாட்டின் மையம் உயிர்த்த கிறிஸ்துவே 17
*- திரு. இ. ம. ஜெயசீலன்*

6. புனித டமசீன் யோவான் 20
*- அருள்சகோ. பா. அ. பிறாயன்*

7. **Synopsis** 22

8. குறுக்கெழுத்துப்போட்டி 25

# ஆசிரியர் கருத்து...

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" என்னும் இயேசுவின் கூற்று எண்பிக்கப்பட்டது அவரின் உயிர்ப்பிலே. இது மனித புத்திக்கு அப்பாற்பட்ட ஒரு உண்மை. எனவே இது ஒரு விசுவாச சத்தியம். இயேசுவின் உயிர்ப்பு விழாவை கிறிஸ்தவர்கள் ஆண்டுதோறும் கொண்டாடுகின்றார்கள். இந்த விழா விசுவாசத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் எமது விசுவாசம் வீணானது என்று புனித பவுல் கூறியுள்ளார். ஆண்டவரின் உயிர்ப்பு விழா எம்மை அழைத்து நிற்பது:

1. ஆண்டவராகிய கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக்கொள்ள
2. அவர் மீதுள்ள விசுவாசத்தை ஆழப்படுத்த
3. அந்த விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கையிட
4. சாட்சியமுள்ள வாழ்வால் விசுவாசத்தை எண்பிக்க
5. அன்பில் ஒன்றிணைந்த சமூகமாக வாழ

இவைதான் ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வு. உயிர்ப்பு விழா எமது விசுவாசத்தை உயிர்ப்பிக்கவேண்டும். எமது விசுவாசம் ஒரு வெறும் அறிக்கையல்ல, ஆனால் அது ஒரு வாழ்வு. அனைத்தையும் கிறிஸ்துவில் ஒன்று சேர்ப்பதும், புதுப்பிப்பதுமே உயிர்ப்பு விழாவின் நோக்கம். உயிருள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைக்க உயிர்த்த இயேசு உடன் இருந்து அருள் புரிவாராக.

**அருள் திரு யே.நிக்கிலஸ்**



# ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்வில் இயேசுவின் உயிர்ப்பு உண்டாக்கிய தாக்கம்

"இறந்தவர் கல்லறையில் இல்லை, அவர் வாழ்கிறார், வாழச் சென்றுள்ளார்".

வாழ்க்கை என்பது பெரும் தேடல். தேடிப் போகும் பயணம் நீண்ட பயணம். இத் தேடலில் ஆதிக் கிறிஸ்தவர்கள் கண்டு பிடித்தது என்ன?

"கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார்.
இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்" திருத்தூதர் பணி 2:32.

ஆதிக் கிறிஸ்தவர்கள் தமது வாழ்வின் சாட்சியத்தால் உயிர்த்த கிறிஸ்துவுக்கு பெரும் சாட்சிகளாய் திகழ்ந்தார்கள். சொல்லில் வேதம் கற்பிக்கவில்லை, வரலாற்று குறிப்பில் கிறிஸ்து உயிர்த்தார் என்று ஓர் தடம் பதிக்கவில்லை, நாலு திசையெங்கும் சென்று உயிர்த்தார் கிறிஸ்து, என்று நல்ல செய்தி சொல்ல வந்தோம் என்று சங்கு ஊதி சத்தம் செய்யவில்லை. அம் மக்களிடையே சமய சார்பு ஓர் ஒப்பற்ற சமூக உணர்வை ஏற்படுத்தியது.

"விசுவசித்தவர் எல்லோரும் ஒருமித்து தங்கள் உடை
மைகள் அனைத்தையும் பொதுப் பொருளாய்க் கொள்வர்
நில புலம் உடைமைகளையெல்லாம் விற்று அவரவர் தேவைக்கேற்ப
எல்லாரும் பங்கிட்டுக் கொள்வர்" திருத்தூதர் பணி 1:44,45.

வாழ்வில் பொருள் தேடும் மனிதனுக்கு ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்வு ஓர் உன்னதமான நிகழ்வாக அமைகின்றது. அவர்கள் பெற்றுக் கொண்ட தாக்கம் அவர்களை அர்த்தமுள்ள வாழ்வுக்கு அழைத்து சென்றது. உயிர்ப்பு அவர்கள் வாழ்வில் இரண்டறக் கலந்து வாழ்வு என்னும் பயணத்தில் தாங்கள் தேடும் அர்த்தத்திற்கு ஒளியாக அமைந்தது.

"செல்வம் செல்வம் இயேசு ஆண்டவர் செல்வம்
எனக்கும் உனக்கும் செல்வம்" உயிர்ப்பு ஏற்படுத்திய தாக்கம் இயேசுவை செல்வமாக ஏற்றுக் கொண்டு வாழ்ந்தார்கள்.

"வாழ்வு என்பது தாயின் உதரத்தில் தொடங்குவதுமல்ல, புதைகுழியில் முடிவதுமல்ல அது நித்திய வாழ்விலே ஒரு கணமாகும்" என்கிறார் ஒரு அறிஞர்.

இன்று இந்த ஒரு கணப்பொழுது தான் வாழ்வு என்று தெரியாமல், வாழ்வு தொலைந்து விட்ட ஓர் உலகம், இந்த உலகத்தில் வாழ்வு என்றால் என்ன, நானும் வாழ்ந்து மற்றவனையும் வாழ வைக்க வேண்டுமென்று ஆதிக் கிறிஸ்தவர்கள் வாழ்ந்த வாழ்வு இன்றைய சமூகத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு. இயேசுவின் உயிர்ப்பு அவர்கள் வாழ்வை தொட்டது. வாழ்வில் உயிரோட்டமிருந்தது. செயலாக்கம் தெரிந்தது. நட்பிலே அவர்கள் வளர்ந்தார்கள். வேறுபாடுகள் ஆதிக்கிறிஸ்தவர்கள் மத்தியில் அறவே ஒழிந்தது. உள்ளத்தாலும், உடைமையாலும் ஒற்றுமை என்பதே அவர்கள் பேச்சும் மூச்சும் மூச்சுமாக இருந்தது.

உலகிலே படைக்கப்பட்ட அத்தனையுள்ளும் விசேட மாற்றம் அடையக் கூடியவன் மனிதனே. உடலிலே பிறந்து உள்ளத்தால் உயர்வடையக் கூடியவன் மனிதனே. மனிதன் தனது உள்ளத்தை உயர்ந்த இலட்சியங் களாலும் நல்ல கருத்துக்களாலும் எந்நேரமும் நிரப்பி வாழ்வில் பொருள் தேடி அர்த்தம் காண்பதற்கு அழைக்கப்பட்டுள்ளான்.

ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை வாழ்வில் பொருள் தேடி அலையும் மக்களிற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அங்கே அன்பிலே மக்கள் பிணைக்கப்பட்டிருந்தார்கள். நட்பிலே அவர்கள் வளர்ந்தார்கள். உயிர்ப்பின் பெரும் தாக்கம் "உள்ளவன்" "இல்லாதவன்" என்ற வர்க்க வேறுபாடு ஒழிந்தது.

"விசுவாசிகள் அத்தனை பேரும் ஒரே உள்ளமும்
ஒரே உயிருமாய் இருந்தனர்".

நாம் ஆண்டவருடைய படைப்பு நம்மில் எந்த வேறுபாடும் இல்லை. கல்வியறிவால், பொருளாதார மேம்பாட்டால், கலாசார உயர்வால் நாம் எல்லோரும் ஒன்றே என்று வாழ்ந்தார்கள். இயேசுவின் உயிர்ப்பு எம்மில் நிரந்தர தாக்கம் ஏற்படுத்தி வாழ்விற்கு பொருள் தருகின்றது என்று வாழ்ந்தார்கள்.

கடவுளின் வார்த்தை வாழ்வில் நிலையான வாழ்வை கொடுப்பதற்கு உயிர்ப்பு அத்திவாரம் போட்டது. கடவுளுடைய வார்த்தை உயிருள்ள, ஆற்றல் மிக்கது, இருபக்கமும் கருக்கு வாய்ந்த எந்த வாளினும் கூர்மையானது. ஆன்மாவின் உள்ளாழத்தையும், ஆவியின் உள்ளாழத்தையும் ஊடுருவு

கிறது. மூட்டு, மூளை வரை எட்டுகிறது; உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது (எபிரே 4:12). இறைவார்த்தை அவர்களின் வாழ்விற்கு அர்த்தம் கொடுத்தது. தேடலின் முக்கிய அம்சம் வார்த்தையில் நம்பிக்கையும், அழியாத உண்மையும் வார்த்தை கொடுத்தது. ஆண்டவர் தொடர்பை வார்த்தையினுடாக ஏற்படுத்தி தனது ஆழமான முத்திரையை பதித்து வாழ்வில் அர்த்தம் கொடுக்கின்றார் என்று அறிந்து கொண்டார்கள்.

மனித உறவினை வளர்ப்பதில் தொடர்பு பெரும்பங்காற்றி வருகின்றது. மனிதன் தனது நாளாந்த வாழ்வில் வார்த்தைகளில் தன்னை பூரணமாக வெளிப்படுகின்றான். இறைவன் தன்னை முழுமையாக வார்த்தையினுடாக, ஏன் வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடி கொண்டார். . . இந்த இறைவார்த்தை பூரணமாக தாக்கம் ஒன்றினை ஏற் படுத்தி உயிர்த்த கிறிஸ்துவின் வார்த்தை உயிருள்ளது, வாழ்வில் உண்மை நிலையினை எடுத்தியம்புவது, வார்த்தையே வாழ்வாக மாறியது.

மானிட வரலாற்றில் மனிதன் இறைவன் பக்கமாகத் திரும்பி முழு மனித வர்க்கத்தை இறைவன் பக்கமாக திருப்பி வரலாறு படைத்தவர்கள் ஆதிக்கிறிஸ்தவர்கள். எவ்வாறு மனிதனாக வாழவேண்டுமென்ற தாக்கத்தை ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்பே தாக்கம் கொடுத்தது. வாழ்வில் பொருள் தேடி அலையும் மக்களுக்கு, வாழ்க்கையை எப்படியும் வாழலாம் என்று வாழ்வின் பொருள் இன்றி எங்கே போகின்றோம் என்று உறுதியான தீர்மானம் செய்யாமல் “கண்டதே காட்சி கொண்டதே கோலம்” பொய்மையான உலகம் படைத்து இது தான் வாழ்வு என்று திரை தெரியாமல் அலையும் மக்களுக்கு இப்படித் தான் வாழவேண்டும் என்று வரலாறு படைத்தவர்கள் ஆதிக்கிறிஸ்தவர்கள்.

இன்றைய சமூகத்தைப் பார்த்து பலரும் பலவாறு கதைத்துக் கொள்கின்றார்கள். மற்றவர்கள் மேல் சுமத்திவிட்டு தான் சரியாக உள்ளேன் அடுத்தவன் தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்று நியாயப்படுத்துதலும், சமூகம், பொதுநலன், ஒன்றுபட்ட வாழ்வு, மதித்து வாழ்தல், ஏற்றுக் கொள்ளல், புரிந்துணர்வு போன்ற நல்ல சமூகப் பண்புகள் எல்லாம் மறைந்து போகின்ற துக்கமான நிலை இன்று உருவாகி வருகின்றது.

இயேசுவின் உயிர்ப்புதான் மனித இனத்தின் நம்பிக்கை, மீட்பின் தொடக்கம். உயிர்ப்பில் தான் என் வாழ்வின் வெற்றியே இருக்கின்றது. இன்னுமோர் உயிர்ப்பு விழா எனக்கு உயிர்தரவில்லை என்றால் எமது விசுவாசம் எது? எங்கே நான் போகின்றேன்? என்று ஒவ்வொருவரும் எமது

வாழ்வின் தாக்கம் பற்றி அறிய வேண்டியவர்களாயுள்ளோம். வாழ்வில் பொருள் தேடி அலையும் எமக்கு வாழ்வு எம்மில் உள்ளது.

படிக்கும் சமூகம், உறவாடும் சமூகம்(பகிர்தல்) கொண்டாடும் சமூகம், செபிக்கும் சமூகம், கொடைகள் நிறைந்த சமூகம், சாட்சியம் கொடுக்கும் சமூகம், வளரும் சமூகம் (திருத்தூதர் பணி 2:12-19). ஏன் நான் உயிர்த்த கிறிஸ்துவுக்கு சாட்சியமும், ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வு தாக்கமும் இன்று எமது சமூகத்தில் ஏற்பட உழைக்க முடியாது? உயிர்த்த கிறிஸ்து என்னில் வாழ்கின்றார், வாழ வந்துள்ளார்.

அருள்திரு. சாள்ஸ் கொலின்ஸ்

துன்பங்கள் உன்னை தாழ்த்துவதில்லை.
ஆனால் உயர்த்துகின்றன.
மனிதரால் வரும் தொல்லைகள்
உன்னை அழிப்பதில்லை.
ஆனால் உனக்குப் போதிக்கின்றன.
இந்த உலகில் நமக்கு அதிக தொல்லை
ஏற்பட்டால் மறு உலக சன்மானத்தைப் பற்றி
அதிக உறுதி ஏற்படுகிறது.
நீதியினிமித்தம் அதிக தொல்லைப்பட்டால்
மறு உலகில் அதிக மகிமை கிடைக்கும்

- புனித இசிதோர் -

# உயிர்ப்பு மானிட விடுதலையின் கால்கோள்

உயிர்ப்பு என்பது இறப்பின் பின் இடம்பெறும் நிகழ்வு மட்டும் தான் என்று எண்ணுகின்றனர். உயிர்ப்பு எதிர்காலத்தில் உலக முடிவில்தான் என எதிர்நோக்குகின்றனர். உயிர்ப்பு என்ற சொல்லே உடல் மீண்டும் உயிர்பெற்றெழச் செய்கிறதாக ஒரு படிமம். இறப்புக்குப்பின் பிரிந்த உயிர் ஒன்று சேர்வதே உயிர்ப்பு என்ற கிறிஸ்தவ வெகுஜன கருத்தியலாக உள்ளது. உயிர்ப்பிற்கும் இன்றைய வாழ்விற்கும் தொடர்பு உண்டு, இத்தொடர்பை உய்த்துணரல், அநுபவித்தல், ஆழமாக்குதல் கிறிஸ்தவ இன்றைய இறையியல் சவாலாக உள்ளது. "அனைத்திலும் முதன்மை பெறும்படி இறந்தோரினின்று பிறந்த தலைப்பேறு இவரே. முழு நிறைவும் அவரில் குடிகொள்ள வேண்டுமென்று இறைவன் திருவுளம் கொண்டார். சிலுவையில் சிந்திய இரத்தத்தால் சமாதானம் உண்டாக்கி விண்ணிலும், மண்ணிலும் யாவற்றையும் அவர் வழியாக தம்மோடு ஒப்புரவாக்க விரும்பினார்" (கொலோ 1 :18–20).

உயிர்ப்பு – வாழ்வு உறவில் மறுவாழ்வு, நிலைவாழ்வு சார் வேதாகமச்சிந்தனைகள், யூதரின் மறை எதிர்நோக்குகள் எவ்விதமாக உயிர்ப்புக் கருவை ஊடுருவி இருக்கின்றது என்ற பார்வை தேவையாகிறது. இசுராயேல் வரலாற்றில் எதிர்நோக்கு வேறுபட்ட பல வடிவங்களை கொண்டுள்ளது. அதிலொன்று தாவீதின் மெசியாக் கொள்கை (Davidic Messianism). இது கி.பி. 8ம் நூற்றாண்டு இறைவாக்கினர்கள் ஆமோஸ், எசாயா, மிக்கேயா, ஒசெயாவின் இலக்கியங்களில் முன்னுரிமை பெற்றுள்ளது. இறைவன் வாக்குப்பண்ணும் இசுராயேல் மக்களின் விடுதலை தாவீதின் வழிமரபில் உதித்த முன்னுதாரண அரசர் மூலமாகவே கிடைக்கும், அவர் வழி உலகில் நீதி அமைதி நீண்ட ஆயுள், வளமான வாழ்வு (தொ.நூ. 3:17–28:1–16) "நாடு" என்ற குறிப்பெயரில் முழு நிறைவை அடையும். புராணச் சிந்தனையில் தாவீதின் அரசு நிலையான அரசு என்ற வடிவமும் பெற்றுள்ளது. (எசாயா 11:1–9) மெசியா ஒரு புராணக் காவியனாக படைப்பின் தொடக்கத்தில் அனைத்தையும் ஆண்டு நடத்திய தொடக்க மனிதனாக உயர்த்தப்

படுகின்றார். (மிக்கேயா 5:2–3, எசாயா 11:6–9) அவர்கள் எகிப்தில் இருந்து சொந்த நாட்டிற்கு அடைந்ததும் பாலையில் பசியில் இருந்து காப்பாற்றப்பட்டதும் முழு விடுதலையின் முன் அடையாளமாக காணப் படுகின்து. அது சுதந்திரம், சமாதானம், உலகசார் நிறைவை நோக்கி யதாக அமைந்தது. யெருசலேம் அழிவும், பபிலோனியாவிற்கு யூதர்கள் அடிமைகளாக கி.பி. 587ல் எடுத்துச் செல்லப்பட்டதும் யூதர்களின் எதிர்நோக்குகளை சுக்குநூறாக்கியது. கொடுக்கப்பட்ட வாக்குறுதி களுக்கும், பசுமையான எதிர்நோக்குகளுக்கும் அவர்கள் சந்தித்த அடக்குமுறை, அன்னிய ஆதிக்கம், சுரண்டல், துன்பியல் வாழ்வு முரண்பாடாகியது. தெற்கு அரசை ஆட்சிசெய்த தாவீதின் அரசு வரலாற்றின் பக்கங்களில் இருந்து மறைந்து விட, மக்கள் விடுவிக் கப்படுவர் என்ற காலங் காலமான எதிர்பார்ப்புகள் களைப்புத்தட்ட, கருத்தியலில் உடைவு ஏற்பட தம்மை விடுவிக்கும் அரசன் இறைவன் என்றும் அவரது இறுதி வருகையை எதிர்நோக்கத் தொடங்கினர். பபிலோனிய பேர்சிய நாடுகளிலில் அடிமைச் சேவகம் அப்பண்பாடு களின் தாக்கத்தினால் இவர்கள் பிறிதொரு எதிர்நோக்குடன் சொந்த நாட்டிற்கு திரும்பினர். அதுதான் முடிவுகால எதிர்நோக்கு (Apocalyptic hope)

முடிவுகால எதிர்நோக்கு என்பது எதிர்பாரவிதமாய் கணப் பொழுதில் இறைவன் தலையீட்டில் தீமை அரசோச்சிய காலத்தையும் உலகையும் அழித்து புதியவானத்தையும், புதிய பூமியையும் அருளல். "மக்களினம் தோன்றியது முதல் அக்காலம் வரை இருந்திராத துன்ப காலம் வரும்." (டானியேல் 12:1–3) வாழ்வின் துயரங்கள், துன்பங்கள், நோய்கள் முற்றுப்பெறும். முடிவுகால எதிர்நோக்கு மெசியாவின் எதிர்நோக்கைக்கடந்து இறுதிக்கால எதிர்பார்ப்பாக மாற்றமடைந்துள் ளது. மீட்பு வரலாற்றை நிறைவு செய்யும் நிகழ்வாய் இல்லாமல் அதன் இறுதி முடிவாய் மாறும் நிகழ்வாக எதிர்பார்க்கப்படுகிறது. இவ் எதிர்நோக்குகளை முன் உதாரணமாக கொள்ளாமல் அக்காலமக்க ளின் வாழ்விட ஆதங்கங்கள், சிக்கல்கள், தாகிப்புகள், வேட்கைகள், வளமானவாழ்விற்கான எதிர்பார்ப்புகள் என்று கொள்ளவேண்டும். யூதரின் எதிர்நோக்கில் மெசியாவின் காலம், சுபீட்ச காலம், விடுதலையின் காலம், என்ற படிவளர்ச்சிகளுண்டு. இப் பின்புலத்தில் இயேசுவின் உயிர்ப்பை புரிந்து கொள்வது முக்கியமாகின்றது.

உயிர்ப்பு அனைவருக்கும் எதிர்நோக்கை கொடுக்கின்றது. எதிர்நோக்கற்ற மற்றவர்களைப் போல் நீங்களும் துயருறக் கூடாது. (1தெச 4:13) கிறிஸ்து உயிர்ப்புபற்றி முழங்கியபொழுது யுதர்கள் தாம் மரபுவழி கொண்ட எதிர்நோக்குடன் அணுகத்தொடங்கினர். இயேசு வின் உயிர்ப்பு அவர்கள் பார்வையை முற்றுமுழுதாக மாற்றுகிறது. மெசியா சுபீட்சம், வளமான வாழ்வு அருள்வார் என்பதும், வாழ்வியல் போராட்டங்களிலிருந்து தம்மை விடுவிக்க தமக்கு அப்பாற்பட்ட சக்தியுண்டென்றும் மெசியா வந்து அவைகளைத் தீர்த்து விடுவார் என்பதும் மெசியாக்கொள்ளை. இது போராட்டவாழ்வின் யதார்த்தங் களை மழுங்கடிக்கிறது. பொறுப்புகளிலிருந்து நழுவ, முயற்சிகளில் இருந்து விடுபட இது உந்தல் கொடுக்கிறது. வேறு ஒருவர் அப் பொறுப்புகளை ஏற்று தம்மை விடுவிப்பார் என்ற கருத்தியலை இயேசு வின் உயிர்ப்பு முற்றுமுழுதாக உடைக்கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பு இறையியலில் எதிர்நோக்கு சிந்தனைகள் புதிய பரிமாணத்தை பெறுகின்றது. “மானிடமகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும்” என்று சொன்னார். பின்பு அவர் அனை வரையும் நோக்கி, “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில், தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவார். என்பொருட்டுத் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார்” (லூக். 9:22–24).

## மெசியாக் கொள்கை - ஈடுபாடற்ற எதிர் நோக்கு

மெசியாக்கால எதிர்நோக்குகள் வெறும் கனவாக, எட்டப்படாத தொன்றாக மருவியதற்கு ஈடுபாடற்ற எதிர்நோக்கே காரணம். விடுதலைக்கு வழி ஒரு சக்திமிக்க மந்திரக்கோலல்ல. ஈடுபாட்டு எதிர்நோக்குடையவர்கள் முழு விடுதலைக்குழைப்பவர்கள், இவர்கள் கிறித்துவின் உயிர்ப்பின் சக்தியை உள்வாங்கியர்கள், இவர்களுள் கடவுள் தன்சொந்த உடலைப்போல செயலாற்றுகிறார். யூதமக்களின் விடிவு நோக்கிய எதிர்நோக்குச்சுனை மழுங்கடிக்கப்பட்டதிற்கு அவர்கள் கொண்ட எதிர்நோக்கில் பூரண ஈடுபாடுகொள்ளவில்லை. அவர்களுக்குள் பிளவுகள், பிரிவினைகள். விடுதலைப்பயணம் ஒரு முணுமுணுத்த பயணம். எகிப்தின் அடிமை வாழ்வின் பாதுகாப்பு,

சுகபோகங்களை நினைத்து புலம்பிய பயணம் அது. (விப. 14) நீதியின் போராட்டத்தில விழுபவர்களின் சாவின் நோக்கமென்ன? மனித இதயத்ததிலிருந்து தவிர்க்கமுடியாத இக்கேள்விகளுக்கு இயேசுவின் உயிர்ப்பு விடைபகிரும். கிறிஸ்து ஒவ்வொரு முறையும் உயிர்ப்பை முன்னறிவித்தபொழுது தன்னலம் துறக்கவேண்டுமென்றார். தம் உயிரைக்காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மனித நிறைவுக்கான ஏக்கம் இறுதியில் ஏமாற்றம் அடையாது என்பது கிறிஸ்துவின் உயிர்ப்பு தெளிவாக்குகின்றது.

கிறிஸ்துவின் உயிர்ப்பு முழு விடுதலை நோக்கி நகர்கின்றது. மெசியாவின் காலம் அனைத்தும் ஒரு குறுகிய விடிவு நோக்கியதாக இருந்தது. தமது அதிகார பராக்கிரமத்தை திணிப்பதுதான் அவர் களுக்கான விடுதலை நோக்காகியது. தாவீது மெசியாவின் காலம் ஒரு அரசியல் அதிகாரம் நிறைந்ததாக இருக்க விரும்பினர். யூத தேசிய வாதிகள் இறைவனுக்காக புனித யுத்தம் புரிந்து விடுதலை கொணர தயாராகியவர்கள். பரிசேயர் அறநெறியின் அதிகாரத்தில் நம்பிக்கை கொண்டு அதை இறுக்கமாக பின்பற்றுவதனால் விடிவு கிட்டும் என்று நம்புகிறவர்கள். உலக முடிவுக்கால சிந்தனையாளர் இயற்கை அழிவுகள் வழி இறைவன் தலையிட்டு விடுவிப்பார் இவைகள் அனைத்தும் கிறிஸ்துவினால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று (மத்தேயு4:1–11) தனது பாடுகள் உயிர்ப்பினால் வேறுபட்ட மீட்பின் காலத்தை எதிர்நோக்க வேண்டும் என்று கிறிஸ்து கற்பிக்கின்றார். அதிகார பராக்கிரமத்தினால் முழு விடுதலை பெறமுடியாது. அதி காரம் அநீதியான அமைப்பை உருவாக்குகின்றது. விடிவிற்கு வலு வானது அன்பு. இதைத்தான் தனது அரசிற்கு முழங்கு கிறார் இயேசு. பழைய ஏற்பாடு தொடக்கம் முதல் முடிவு வரை ஒரு எதிர்நோக்கு நூல். ஆனால் புதிய ஏற்பாடு அன்பில் முகிழ்ந்த அமர காவியம்.

## முடிவுகால எதிர்நோக்கு - அச்ச உணர்வு

அடுத்ததாக முடிவுகால எதிர்நோக்கு கோட்பாடும் கிறிஸ்து வின் உயிர்ப்பில் ஆட்டங்காணுகிறது. வாழ்வின் விழிம்பிற்கு தள்ளப் பட்ட மனிதன், ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டு தனது நிம்மதியான விடிவுற்கு இறப்பிலும் இயற்கை அழிவிலும் உலக முடிவிற்கும் தஞ்சம் புகுவதை இவ் எதிர்நோக்கு நியாயப்படுத்துகிறது. இது மனிதனை விரக்தி நிலைக்கு தள்ளுகிறது. மனிதனின் வளமான ஏக்கங்களை

யும் நியாய தேடல்களுக்கும் இது வேட்டுவைக்கிறது. வேரோட்டத் தீர்வுகளுக்கு பதிலாக இது மேலோட்டக்கருவை முன்வைக்கிறது அழிவுகள், பயங்கர நிகழ்களை முனைப்பிற்கு கொணர்ந்து மனிதனை நெறிப்படுத்தலாம் பயத்தைக்காட்டி கட்டுப்படத்தலாம் என்பது மறை களின் பரிந்துரையாயிருக்கிறது. கிறிஸ்து இறைவனை அன்புசெய்யும் இறைத்தந்தையாக காண்பிக்கின்றார். நடக்கவிருக்கும் இறுதிக்கால நிகழ்வுகளை பயங்கர நிகழ்வாக வெளிப்படுத்தி மனதில் அச்சத்தை உருவாக்கி மக்களை நெறிப்படுத்த முனைவது கிறிஸ்துவின் நற் செய்தி முழக்கத்திற்கு முரணானது. மக்களைச் சபையில் சேர்ப்பதற் கும் ஆலயங்களில் வரவை அதிகரிப்பதற்கும் அதீத அச்ச உணர்வு ஊட்டப்படும் சமூகம் கனம் குறைந்த, நோயுற்ற, யதார்த்தங்களுக்கு முகம்கொடுக்க முடியாத சமுகமாக மாறுகிறது. தவறான இறையியல் செய்முறை கிறிஸ்தவ வாழ்விற்கே தடுமாற்றம் விளைவிக்கலாம்.!

சமாதானத்திற்கான நோபல் பரிசை 1991 பெற்றவரும், பர்மா நாட்டு விடுதலை வீரர் ஔங்கன் சூகி எழுதுகிறார். “ஒரு மனித னுக்கோ ஒரு நாட்டுக்கோ இருக்கக்கூடிய பேறு அச்சமின்மை. மனித உரிமைகள் உயிர்த்துடிப்புடன் இருப்பதை மறுக்கும் ஒரு சமுதாயக் கட்டுகோப்பின் அடித்தளத்தையே ஆட்டங்காணவைக்க அதற்கு சவால் விடத் தேவையானது அச்சமின்மை (துணிவு).” மகாத்மகாந்தி அவர்கள் சாதித்த மாபெருஞ் சாதனைகளிலொன்று, அவர் இந்திய மக்களின் நெஞ்சில் துணிவை நிலைநாட்டியது என்றார் நேரு. ஒருவர் கெட்டொழிந்து போவதற்கு காரணம் அதிகாரம் அல்ல அச்சமே காரணம். அதிகாரத்தை ஏகபோகமாக்கி மக்களை அச்சுறுத்தி அரசாள்பவர்கள், எங்கே அந்த அதிகார அரக்கன் தம்மைவிட்டு போய் விடுவானோ என்று அஞ்சிக்கெடுகிறார்கள்.

தொடர்ந்து வாழ வேண்டுமென்று ஏங்கும்போது நாம் ஏன் சாகவேண்டும்? நீதியின் போராட்டத்தில் விழுபவர்களின் சாவின் நோக்கமென்ன? மனித இதயத்திலிருந்து தவிர்க்க முடியாத இக்கேள்விகளுக்கு இயேசுவின் உயிர்ப்பு விடைபகரும். மானிடர் இறப்பிற்காக பிறப்பதில்லை, உயிர்ப்பிக்க படுவதற்காக இறப்பார்கள். கிறிஸ்து இயேசு இவ் உண்மையை ஆணித்தரமாக உறுதிசெய்கிறார். உயிர்ப்பு இறையரசை தெளிவாக நியாயப்படுத்துகிறது. இறையரசின் யதார்த்தத்தை நிறைவு செய்வதாக உயிர்ப்பு முகிழ்கிறது.


உயிர்ப்பு நீண்டகாலங்களுக்கு முன்னே ஒரு பழைய நிகழ்வல்ல, புதிய வானத்தினதும், புதிய பூமியினதும் தொடர்புகளை காட்டும் ஒன்று. உயிர்த்த இயேசுவின் ஆளுகையில் மானிடமும், பிரபஞ்சமும் வெற்றியடைய அழைக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம். உயிர்ப்பு எம்மிடம் இருந்து புறத்தே எதிர்பார்க்கப்பட்டதல்ல. அவ் உயிர்ப்புச் சக்தி எம்மிடமே உள்ளது. எங்கெங்கு உலகில் உண்மையான மானிட வாழ்வு தழைக்குமோ, மனிதன் தன் சமூக வாழ்வில் ஒன்றாக சேர்ந்து சகோதரத்துவமான இணைப்பை உருவாக்கலாமோ அங்கே உயிர்ப்பு தொடர்பு நிகழ்வாக மாற்றப்படுகிறது. ஆண்டவனின் இறுதிவருகை மட்டும் இவ் உயிர்ப்பு தொடரும். நீதியிலும், உண்மையிலும் நம்பிக்கை கொள்பவர்கள் உயிர்ப்பில் நம்பிக்கை கொள்பவர்கள், உயிர்ப்பில் நம்பிக்கை கொள்கிறவர்கள், நீதியிலும், உண்மையிலும் நம்பிக்கை கொள்ளவேண்டும். அவர்கள் துயரத்தில் வாழவேண்டியதில்லை.

பணி. அ. பி. யெயசேகரம்.

செபித்து, பின் வேதாகமத்தை
படிக்கத்தொடங்கு
அதைப்படித்த பின் செபி.
வேதாகமத்தை அறியாதவன்
கிறிஸ்துநாதரை அறிவதில்லை.
எப்பொழுதும் ஏதாவது செய்து
கொண்டிரு. கடவுள் உன்னைப்
பார்க்க வந்தாலும் சரி,
சாத்தான் வந்தாலும் சரி
நீ சோம்பேறியாய் இருக்கக்கூடாது.

- புனித எரோணிமுஸ் -

# கிறிஸ்துவின் உயிர்ப்பில் அர்த்தம்பெறும் மறுவாழ்வு



## முன்னுரை

உலக வரலாற்றிலே மனிதர்கள் பலர் புகழ் பெற்றுள்ளனர். சாதனைகள் பல புரிந்தனர். ஆனால் அனைவரும் இறந்து விட்டனர். ஒரே ஒருவர் மட்டும் மனித வரலாற்றில் விதிவிலக்கானார். அவரே இறைமகன் கிறிஸ்து. அவரும் இறந்தார். ஆனால் மூன்றாம் நாள் உயிர்த்து சாவை வென்றார். தாம் இறைமகன் என்று நிருபித்தார். எமக்கும் உயிர்ப்பு, மறுவாழ்வு உண்டு என்று நிருபித்தார். "நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து என்னிடம் அழைத்துக் கொள்வேன" (யோவா 14:3).

## எமது நிலை

வாழ்க்கை மூன்று சங்கு என்பார்கள் முதல்சங்கு பாலூட்டு கிறது குழந்தைக்கு, இரண்டாவது சங்கு திருமணத்தின் போது மூன்றாவது மரணத்திற்குப்பின் ஊதப்படுகிறது. நேற்று இருந்தவர் இன்று இல்லை என்னும் பெருமை உடையது இந்த உலகு. மரணம் என்னை எங்கு சந்திக்கும்? தெரியவே தெரியாது! எந்த வேளையில்? அதுவும் தெரியாது! எப்படி மரணம் என்னை அணைக்கும் என்றும் தெரியாது! இறப்புக்குப்பின் என்ன நடக்கும் என்றும் தெரியாது! பின்பு என்ன தான் தெரியும்? மரணம் நிச்சயமாக வரும் என்பது தான் மதிப்பது நிச்சயம். மரணம் எங்கோ, எப்போது, எப்படி, என்ன, என்ற கேள்விகளுக்கு இறைவன் தரும் வெளிச்சம் தான் எம் நம்பிக்கை.

## இயேசு உண்மையாகவே எமக்காக இறந்தார் - உயிர்த்தார்

"மறை நூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து அடக்கம் செய்யப்பட்டவராக மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார்" (1 கொரி 15:3-4). இயேசு நம் குற்றங்களுக்காக காயப்பட்டார் நம் தீச் செயலுக்காக நொறுக்கப் பட்டவராக அவர் தம் உயிரை எம் குற்றம், நீக்கப் பலியாகத் தந்தார். அவர் தம்மையே சாவுக்கு கையளித்தார். பலரின் பாவத்தை சுமந்தார்" (காண்க ஏசா 54:5-12).

## எப்படி உயிர்த்தார்

விவிலிய சான்றுகளில் "ஏனெனில் என்னைப் பாதாளத்திடம் ஒப்பு விக்கமாட்டீர், உம் அன்பனைப் படுகுழியைக் காண விடமாட்டீர்" (காண்க திருப்பா 16:8-11) என்பதும் "யோனா மூன்று பகலும் மூன்று இரவும் ஒரு பெரிய மீன் வயிற்றில் இருந்தார். அவ்வாறே மானிட மகனும் மூன்று பகலும் மூன்று இரவும் நிலத்தினுள்ளே இருப்பார்" (மத் 12:40) என்ற கூற்றும், மானிட மகன் கொல்லப்பட்டு மூன்று நாளுக்குப் பின் அவர் உயிர்த்தெழுவார் (மாற் 8:31) என்ற இயேசுவின் அறிவிப்புக்களும் இயேசுவின் உயிர்ப்பை முன் குறித்து காட்டு கின்றன.

இறந்தவர் எப்படி உயித்தார் என்று நான்கு நற்செய்தியாளர் களும் வெவ்வேறு வர்ணனைகளுடன் நமக்குத் தருகின்றார்கள் (மத் 28:1-8).

I வெறுமையான கல்லறையைப் பற்றிய விளக்கம் வாயிலாக (மாற் 16:1-8,7 லூாக் 24:1-12, யோவா 20:1-10)

II மக்தலா மரியா மற்றும் பெண்களும் (மற் 28:9-10, மாற் 16:9, லூாக்.24:2-3, அரு.20:14-18) சீடர்களும் (மத்28:16-20, மாற்.16:12-14 லூாக் 24:15-34, யோவா 20:1-29) பெற்ற உயிர்த்த இயேசுவின் காட்சிகளைப் பற்றிய தகவல்கள் ஊடாகவும், வரலாற் றைச் சார்ந்த இயேசுவின் உயிர்ப்பை பற்றிய தகவல்களை தம்முன் கொண்டு வருகின்றார்கள்.

## ஏன் உயிர்த்தார்

### புனித பவுலின் சான்றுகள்

"இறந்தோர் உயிர்த்தெழமாட்டார் ஏனெனில் கிறிஸ்துவும் உயிருடன் எழுப்பப்படவில்லை என்றாகிவிடும். கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1 கொரி 15:13–14).

புனித பவுலின் போதனையில் உயிர்த்தெழுதல் ஒரு முக்கிய கருப் பொருளாக இருப்பதை இந்தவாக்கியத்தில் காணலாம். இவரின் திருமுகங்கள் கிறிஸ்துவின் உயிர்ப்புக்குச் சான்று பகர்ந்து கிறிஸ்து ஏன் உயிர்த்தார் என்பதையும் விளக்குகின்றன. இதை ஆராயும் போது இரண்டு கருத்துக்கள் தெளிவாகின்றன.

முதலாவது: பவுல் வெறும் கல்லறைபற்றி தனது திருமுகங்களில் கூறாமல் விட்டிருப்பது, இரண்டாவது கிறிஸ்துவின் இறப்பு உயிர்ப்பும் நிகழ்ச்சிகள் தான் கிறிஸ்தவனின் வாழ்க்கை விசுவாசம் என மக்களுக்கு விளக்கும் விதம்.

சில கொரிந்தியர்கள் 'உயிர்ப்பு உண்டு' என்பதை ஏற்க மறுத்தார்கள் இவர்களுக்கு உயிர்ப்பை நிரூபிக்க வெறும் கல்லறையை எல்லா அறிஞரும் எடுத்துக்காட்ட புனித பவுல் உயிர்ப்பைப்பற்றி சிறப்பான விளக்கம் தருகிறார்.

"விண்ணகம் சார்ந்தவைகளுக்கு ஒருவகையான விளக்கமும் மண்ணைச் சார்ந்தவைகளுக்கு இன்னொரு வகையான உருவமும் உண்டு. விண்ணைச் சார்ந்தவற்றின் அழகு வேறு மண்ணைச் சார்ந்த வற்றின் அழகு வேறு" (1 கொரி. 15:40). "மனித இயல்பு கொண்ட உடலாய் விதைக்கப்படுவது ஆவிக்குரிய உடலாய் உயிர்பெற்று எழுகிறது" (1 கொரி. 15:44). கல்லறையில் மனிதக்கூடு இருக்கிறதோ இல்லையோ இது முக்கியமல்ல மாறாக அங்கு ஏற்படும் மாற்றமே முக்கியமானது என்று கூறுகின்றார். 'ஊனியல்புடைய மனிதர் இறையாட்சியை உரிமைப்பேறாக அடைய முடியாது அழிவுக்குரியது அழியாமையை உரிமைப் பேறாக அடைய முடியாது (1கொரி 15:50). "நாம்

அனைவரும் சாகமாட்டோம் ஆனால் அனைவரும் மாற்றுரு பெறுவோம். . . அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும்" (1கொரி 15:51,53). இவ்வகையான மாற்றமே பவுலுக்கு உயிர்ப்பின் கருப்பொருள் இந்தக் கருப்பொருள் மரணத்தின் மேலுள்ள அச்சத்தை அழித்துவிடுகின்றது. கிறிஸ்துவின் உயிர்ப்பிலே மரணத்தின் மேல் வெற்றி காணமுடியும் என்ற நம்பிக்கை ஒளிர்கின்றது. இறந்தோர் உயிர்தெழுதல் இல்லையெனில் உண்போம் குடிப்போம், நாளைக்கு சாவோம் என்று இருக்கலாமே பின் ஏன் நாங்கள் எந்நேரமும் ஆபத்திற்குள்ளாவதேன்? நான் நாள் தோறும் சாவை எதிர் கொள்கின்றேன். (1கொரி 15:30,32). மீட்பில் உடலுக்குப் பங்கு இல்லையெனில் அதனைச் செபத்தால் அடக்கி வாழ்வதில் பயன் என்ன? ஆன்ம உடலோடு படைக்கப்பட்ட மனிதன் தன் அமைப்பில் ஒரு பகுதியை மட்டும் நிறைவு செய்வதாக இருப்பின் இறுதியில் அவன் அடையும் பேறு முழு நிறையை அடையாது. தமது உயிர்ப்பை நாம் மறுப்பது கிறிஸ்துவின் உயிர்ப்பை மறுப்பது போலாகும் எனப் பவுல் எண்ணுகின்றார். ஒன்றை ஏற்றுக் கொண்டு மற்றதை நிராகரித்தல் கூடாது "ஒரு மனிதர் வழியாகச் சாவு வந்தது போல ஒரு மனிதர் வழியாகவே இறந்தோர் உயிர்த்தெழுகின்றனர். ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள்ளானது போலக் கிறிஸ்துவை முன்னிட்டு அனைவரும் உயிர் பெறுவர் (1கொரி15:21–22). ஒப்புவமைகளும் இதையே வலியுறுத்துகின்றன. இயேசு நமக்காக இறந்து, உயிர்த்து மரணத்தின் மீது வெற்றி கொண்டார். அவரது உயிர்ப்பே மரணத்தின் மேல் அவர் கொண்ட வெற்றியாகும்.

"சாவு முற்றிலும் ஒழிந்தது. வெற்றி கிடைத்தது. சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" (1கொரி 15:54,55).

## திருச்சபையின் விசுவாசம்

திருச்சபையின் விசுவாசமும் இதுவே! "மரித்து அடக்கம் செய்யப்பட்டார். மூன்றாம் நாள் உயிர்த் தெழுந்தார்" இயேசு கிறிஸ்துவில் "மரித்தோர் உயிர்ப்பையும் நித்திய வாழ்வையும் விசுவசிக்கின்றேன்." கிறிஸ்து உயிர்காவிடில் கிறிஸ்தவ சமயத்திற்கு அர்த்தமில்லை நம்பிக்கை என்பது வீண் பேச்சாகிவிடும் கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் அவர் இறைமகன் இல்லை, இறைவனால் அனுப்பப்பட்டவரும் அல்லர். மீட்பரும் அல்லர் அவரை நம்புவதில் பலனேதுமில்லை

கிறிஸ்தவனின் வாழ்வும் பயனற்றதே இறைமகன் தம்மோடு இணைக் கப்பட்ட மனித இயல்பில் இறந்து உயிர்த்து சாவை வென்று மனிதனை மீட்டார். அவனை ஒரு புதுப்படைப்பாக உருமாற்றினார்'' "சாவை தம் இறப்பால் அழித்து கிறிஸ்து உயிர்த்து விட்டார் தம்மில் நாமும் மக்க ளாக "அப்பா பிதாவே என்று தூய ஆவியில் அழைக்கக் கூடிய வகையில் இறைமகன் நமக்கு வாழ்வை அருளியுள்ளார் (திருச்சபை எனும் கொள்கை திரட்டு எண் 7:22) கிறிஸ்துவும் கிறிஸ்தவர்களும் ஒன்றிணைந்தவர்கள் ஓர் உடல். தந்தை இறப்பு உயிர்ப்பில் மகன் உயிர் பெற்றது போல கிறிஸ்தவன் கிறிஸ்துவில் உயிர்க்கிறான். கிறிஸ்து வழியாக உயிர்கிறான். எவ்வாறெனில், திருமுழுக்கின் வழி யாக கிறிஸ்துவோடு ஒன்றிப்பதால். அவர் உயிர்த்த போது உயிர் பெறு கின்றான். தமது உயிர்ப்புக்கு அவருடைய பாடுகள் காரணமாகின்றன ஆதலால் அவர் வழியாக உயிர்ப்போம் ஒப்புவமைகளும் இதையே வலியுறுத்துகின்றன. ஆனால் இவை இவ்வுலகில் அழிக்ககூடியவை இவ்வுலகோடு முடிவடைய இயேசுவின் உயிர்ப்பும் அதனால் அர்த்தப் பெற்று எல்லோர்க்கும் கிடைக்கும் மறுவாழ்வும் நித்தியத்திற்குமா னவை ஒப்புவமைகளால் ஒருபோதுமே விளங்கப்படுத்த முடியாதவை.


## முடிவுரை

எல்லோர் போலும் இயேசு பிறந்தார். இறந்தார் விதிவிலக்காக உயிர்த்தெழுந்தார். "இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிரு டன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது'' (1கொரி 15-20) மரணம் வரும் என்பது எப்படி நிச்சயமோ அப்படியே கிறிஸ்துவின் உயிர்ப்பில் நமக்கு மறுவாழ்வு உண்டு என்பதும் இதுவெ நமது விசு வாசம் இது நமது வாழ்வாக்கப்படுகின்றதா? நடைமுறை வாழ்வில் மறுவாழ்வு இல்லை என்பது போல் உலகமெல்லாம் நமதாக்கிக் கொள்ள வாழ்கின்றோம்.

அருட்சகோ. எஸ். ஜே. சி. பாஸ்கரன்

> இயேசுவுக்காக இரத்தத்தை சிந்தியவர்கள் மாத்திரமல்ல, ஆனால்
> இயேசுவுக்கு விடாமுயற்சியுடன் சேவை செய்கிறவர்களும்
> மறைசாட்சிகளே.
>
> - புனித ஜெரோம் -

# திருவழிபாட்டின் மையம் உயிர்த்த கிறிஸ்து



"ஆண்டவரே நீர் வருமளவும் உமது இறப்பினை அறிக்கை யிடுகின்றோம் உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம்." இது திருப்பலியில் விசுவாசிகள் அனைவரும் வெளிப்படுத்தும் விசுவாச அறிக்கை.

கிறிஸ்து உலகிற்கு வந்ததின் நோக்கம் மனிதனை மீட்பதற் காக. கிறிஸ்து தனது பாடுகள் மரணம் உயிர்ப்பினால் மனிதனைச் சாவினின்றும் பாவத்தினின்றும் மீட்டார். இறைவனையும் மனிதனை யும் இணைக்கும் பாலமாக விளங்கினார்.அவர் மனிதனின் பாவச் சுமையை தன்மேல் சுமந்து மனிதனுக்குப் பரிகாரம் தேடித்தந்தார். அவரது உயிர்ப்பு அவரை எல்லா கட்டுக்களிலிருந்தும் அவிழ்த்து விட்டது. கிறிஸ்து உலக மக்கள் அனைவரையும் மீட்க திருவுளம் கொண்டார். கிறிஸ்துவின் மீட்புப் பணி உலகப் பொதுப்பணி கிறிஸ்துவின் உயிர்ப்பு உலகில் அனைத்து மக்களையும் மீட்க வேண்டும், எனவே அது தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதற் காக அவர் திருத்தூதர்களை தெரிந்தெடுத்து உலகம் எத்திசையும் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க அனுப்பி வைத்தார். திருத் தூதர்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பின் அனுபவத்தை போதித்தார்கள் திருத்தூதர்களின் போதனையால் மக்கள் கிறிஸ்துவை சந்தித்தனர். மனிதன் கிறிஸ்துவை சந்திக்கும் நிகழ்ச்சி திருவழிபாட்டில் முழுமை யடைகிறது. "கிறஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக் கையும் பொருளற்றதாயிருக்கும்" (1கொரி 15:14) எனத்தூய பவுல் கூறுகின்றார். திருச்சபை கிறிஸ்துவின் உயிர்ப்பிலே பிறக்கின்றது. கிறிஸ்துவின் உயிர்ப்பை ஏற்று விசுவசிக்கும் கூட்டமே திருச்சபை. திருச்சபை நன்கு ஊட்டம் பெற்று வளர யேசுக்கிறிஸ்துவால் ஏற்படுத் தப்பட்டதே திருவருட்சாதனங்கள். திருவருட்சாதனங்கள் உயிர்த்த கிறிஸ்துவின் வல்லமையுள்ள செயல்களின் தொடர்ச்சியாகும். திரு

வருட்சாதனங்கள் வழியாக கிறிஸ்து நம்மோடு உறவாடி செயல் படுகின்றார். மரணம் உயிர்ப்பினால் தனது அன்பை எண்பித்த கிறிஸ்து, இன்று திருவருட்சாதனங்கள் வழியாக அன்பு காட்டு கின்றார். திருவருட்சாதனங்கள் வழியாக நாம் மீட்பராகிய கிறிஸ் துவை சந்திக்கின்றோம், அவரோடு இணைகின்றோம்.

திருவருட்சாதனங்கள் இறைவனின் அருளைக் குறித்துக் காட் டும் அடையாளங்கள். இறைவனின் அருளை எமக்கு முதலில் குறித்துக் காட்டுபவர் கிறிஸ்து இயேசு. அதனால் கிறிஸ்துவே முதலும் முதன் மையுமான திருவருட்சாதனம். கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு பின் அவரது இரண்டாம் வருகை வரை எமது மீட்பின் அடையாளமாக இருப்பது திருச்சபை. திருச்சபை இன்றும் கிறிஸ்துவின் மரணத்தை யும் உயிர்ப்பையும் அறிக்கையிடுகின்றது. அதனால் திருச்சபை கிறிஸ்துவின் திருவருட்சாதனமாகின்றது. கடவுளின் மீட்புத் திட்டத்தை திருச்சபை தன்னகத்தே கொண்டுள்ளதால் திருச்சபை கிறிஸ்துவின் அருட்சாதனமாகிறது. திருச்சபை திருவழிபாட்டு நிகழ்ச்சிகளால் தனது திருவருட்சாதனத் தன்மையைப் பறைசாற்று கின்றது. கிறிஸ்துவின் அருட்சாதனமாக விளங்கும் திருச்சபை கிறிஸ்துவை தன்னுள் கொண்டுள்ளது. கிறிஸ்து இன்று நம்மிடையே வாழ்ந்து தனது பாஸ்கா மறை பொருளின் பலன்களை தொடர்ந்து நீடிக்கச் செய்கின்றார்.

கிறிஸ்து தன்னுடைய மரணம் உயிர்ப்பு இவற்றின் வழியாகப் பெற்ற மீட்பின் பலனைப்பகிர திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தை ஏற்படுத்தினார். "ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தா லன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது" (யோவா 3:5). கிறிஸ்து திருமுழுக்கின் அவசியத்தை நிக்கதேமுக்கு கூறிய வார்த்தைகளில் காட்டுகிறார். திருமுழுக்கில் நாம் கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்ப்பிலும் பங்கு பெறுகிறோம். கிறிஸ்துவின் மறையுடலின் உறுப் பினராகின்றோம். "நாமும் புது வாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திரு முழுக்கின் வழியாக அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். அவர் இறந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில் அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்" (உரோ 6:4-5) என்று தூய பவுல் கூறுகின்றார். எனவே கிறிஸ்துவைப் போல உயிர்த்தவர்களாய் வாழ திருமுழுக்கு அருட்சாதனம் எமக்கு அருளை பொழிகின்றது.

கிறிஸ்து ஏற்படுத்திய அருட்சாதனங்களில் நடுநாயமாக இருப்பது நற்கருணையாகும். நற்கருணை கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்ப்பையும் நினைவு கூரும் அருட்சாதனமாகும் எனவே தான் மற்ற அருட்சாதனங்கள் நற்கருணையை மையமாகக் கொண்டுள்ளன. இன்று திருச்சபையில் ஏனைய திருவருட்சாதனங்கள், திருப்பலியோடு இணைந்த வழிபாட்டில் வழங்கப்படுவதை நாம் காண்கின்றோம். கிறிஸ்து கடைசி இராவுணவின் போது தன் உடலையும் இரத்தத்தையும் நமது உணவாகத் தருகின்றார் (மாற் 14:22–25) கிறிஸ்து இறந்து உயிர்த்த பின் அப்போஸ்தலர்கள் அந்த அப்பம் பிட்குதலை தொடர்ந்து நடத்துகின்றார்கள். திருச்சபை வளரத் தொடங்கிய காலத்தில் கிறிஸ்து உயிர்த்த வாரத்தின் முதல் நாளன்று அப்பத்தை பிட்கும் நன்றி நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டனர். கிறிஸ்தவர்கள் அப்பத்தை பிட்டு உண்ண ஒன்று கூடும். போதெல்லாம் அவர்கள் முதலில் பட்டறிந்தது கிறிஸ்துவின் பிரசன்னத்தையே “உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” (மத் 28:20) உயிர்த்த கிறிஸ்து திருவழிபாட்டில் செயலாற்றுகிறார். நற்கருணையில் அவர் தொடர்ந்து பிரசன்னமாக இருக்கிறார். திருமுழுக்கில் கிறிஸ்துவுடன் இணையும் நாம் நற்கருணை வழியாக அந்த உறவில் வலுப் பெறகிறோம் அருட்சாதனங்களில் செயலாற்றுபவர் உயிர்த்த கிறிஸ்துவே. திருவருட்சாதனங்களில் நாம் கிறிஸ்துவை சந்திக்கிறோம். இது சாதாரண சந்திப்பு அல்ல. அருட்சாதனங்களில் உயிர்த்த கிறிஸ்துவை நேரடியாக சந்தித்து அனுபவிக்கின்றோம்.

திருவருட்சாதனங்கள் உயிர்த்த கிறிஸ்துவை உணர, அவரிலே வளர, உயிர்த்த கிறிஸ்தவர்களாக வாழ துணைபுரிகின்றன. திருவழிபாடு கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளை கொண்டாடுவதே. திருவழிபாட்டில் உயிர்த்த கிறிஸ்து பிரசன்னமாக இருக்கிறார். திருவழிபாட்டின் மையமாக விளங்கும் உயிர்த்த கிறிஸ்துவை நாம் அருட்சாதனக் கொண்டாட்டங்களில் சந்தித்து அவரில் வாழ்ந்து சாட்சிகளாக மாறுவோம்.

இ. ம. ஜெயசீலன்

துணைநின்ற நூல்கள்:

1. உயிர்ப்பின் ஒளியில்
2. உறவாடும் இறைவன்

# புனித டமசீன் யோவான்

## (C. 675 - 749)

இவருடைய தந்தை உத்தம கிறிஸ்தவ வாழ்வு நடத்தி கலீப் ஆக இருந்த அப்துல் மலிக் என்பவரது ஆட்சியிலே உயர் பதவிவகித்தார். சீரியன் தலைநகரான டமஸ்கஸ் நகரில் அவர் வாழ்ந்து வந்தார். 699ம் ஆண்டில் சிசிலி அப்துல் மலிக்கினால் சூறையாடப்பட்ட போது அவ் விடத்து சந்நியாசியார் கொஸ்மஸ் என்பவரை இவர் தந்தை விலைக்கு வாங்கினார். தன் மகன் யோவானை அவரிடம் ஒப்படைத்தார். அப் பொழுது யோவானுக்கு வயது 23. யோவான் சிறந்த பயிற்சி பெற்றார். திறமை வாய்ந்தவர். எனவே தந்தை இறந்ததும் டமஸ்கஸ் நகரில் பிரதம வருமான அதிகாரியாகவும், ஆலோசகராகவும் இவர் நியமனம் பெற்றார்.

அராபிய மன்னர்கள் கிறிஸ்தவர்களுக்கு ஓரளவு சுதந்திரம் கொடுத்திருந்தார்கள். குறிப்பிட்ட கோவில்களில் கிறிஸ்தவர்கள் வழி பாடு நடத்தக்கூடியதாயிருந்தது. 726ம் ஆண்டில் சுரூபங்களை வைத்திருக்கலாகாது என்று பேரரசன் லெயோ ஒரு சட்டம் வெளி யிட்டான். யோவான் அச்சமின்றி அவனை எதிர்த்தார். சுரூபங்களை வைத்திருப்பதும், வணங்குவதும் குற்றம் அல்ல என்று அவர் எண் பித்தார். இதனால் அரசன் கடும் சினம் கொண்டு இவரைப் பிடிக்க முயன்றான். ஆனால் கலீபாவின் ஆட்சியின் கீழ் இவர் இருந்தமை யால் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. 750ம் ஆண்டில் ஜெருசலேம் நகருக்கு அருகில் இருந்த புனித சபாஸ் மடத்திற்கு புனித யோவான் சென்றார். சில ஆண்டுகளுக்குப் பின் குருப்பட்டம் பெற்றார். அநேக அரிய நூல்களை எழுதி திருச்சபைக்கு சிறந்த சேவை செய்தார்.

இவர் தன்னுடைய எழுத்துக்களின் மூலம் பலராலும் அறியப்பட்டவர்.

- விக்கிரகங்களை உடைப்பவர்களுக்கு (Iconoclasts) எதிராக இவர் எழுதினார்.

- மெய்யியல் உண்மைகள், பேதகங்கள், உண்மை, விசுவாசம் ஆகியவற்றைப் பற்றி மெய்யறிவின் ஊற்று என்ற நூலை (The Fount of wisdom) எழுதினார்.

- புராதன விசுவாசம் பற்றிய விளக்கம் (An Exact Exposition of the Orthodox Faith) என்னும் நூலையும் எழுதினார். இந்த நூல் கிழக்கிலே மிகவும் பிரபல்யமானதாகப் பேணப்பட்டது.

- இவர் ஒரு கவிஞர். பல கவிதைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

- பல மறையுரைகளை வரைந்தார். குறிப்பாக கன்னிமரியாளைப் பற்றி எழுதினார்.

கிரேக்க மரபுத்தந்தையர்களுள் இறுதியானவராகிய இவர் புனித சபாஸினுடைய மடத்தில் 749ம் ஆண்டு டிசம்பர் 5ல் இறைவனடி சேர்ந்தார். திருத்தந்தை 13ம் சிங்கராயர் 1890ல் இவரைத் திருச்சபையின் மறைவல்லுனர்களுள் ஒருவராகப் பிரகடனப்படுத்தினார்.

அருள்சகோ. பா. அ. பிறாயன்

ஆண்டவரே, உமது சிலுவையானது ஆசீர் அனைத்திற்கும், ஊற்று வரங்கள் அனைத்தும் சுரக்கும் சுனை. விசுவாசிகள் சிலுவையின் பலவீனத்தில் பலம் அடைகிறார்கள். அவமானத்தில் மகிமை அடைகிறார்கள். சாவில் வாழ்வை அடைகிறார்கள்.

- புனித பெரிய சிங்கராயர் -

## SYNOPSIS

# THE IMPACT OF JESUS' RESURRECTION ON THE EARLY CHRISTIANS

**Rev. Fr. Charls Collins**

We read in the Acts of the Apostles that the early Christians lived a life of witness to Jesus' resurrection (Acts 2:32). Their belief in Jesus Christ made them to live a life of sharing with charity (Acts 2:44). Jesus became the centre of their lives. He was everything for them. He was the greatest treasure they could possess. Hence they were ready to lose all their wealth and property for His sake.

Their faith in the risen Lord impelled them to love their neighbours especially the poor, widows and the orphans. They were united in their hearts and minds and lived as a loving community. Their lives were founded on the word of God. Thus they were strengthened in their faith day by day (Heb.4:12). They gathered together to listen to God's word, to pray and to break the bread. Their lives became a great example even for the non-believers (Acts 2:12-19). Like the early Christians we are all called to live a life of faith and to bear witness to the risen Lord

# THE RESURRECTION OF JESUS AND HUMAN LIBERATION

**Rev. Fr. A. F. X. Jeyasegaram**

It is a common belief that the resurrection is a future event after death. But resurrection has its impact in this present life. In the Old Testament, the Israelites hoped for a liberation and a life after death. The prophets Amos, Isaiah, Michah, Hosea and others made a proclamation of messianic hope. They expected a liberation through a king. The liberation from Egypt was considered to be a sign of

freedom. But when they were taken captives to Babylon their hopes were shattered. As years went by they began to put their trust in God.

The messianic hope was turning towards an eschatological hope. How ever the Israelites believed that the coming of the Messaiah would bring true freedom. But when the messaiah came they did not believe in him. He became a sign of contradiction because he was to suffer and die. Even his disciples were asked to do the same in order to inherit the kingdom of God. Freedom demands involvement even upto the point of death. It is not by possession of power but through service and involvement one can attain freedom.

There is fear in man as to lose his power over the others. Fear is to be abhored. Jesus overcame his fear and died in order rise for the cause of freedom. Resurrection is not a past event. It is an experience of man in his daily strife of freedom. Where ever man becomes free he experiences the resurrection. Justice, truth, and freedom are signs of resurrection.

## THE MEANING OF NEXT LIFE IN THE RESURRECTION OF JESUS CHRIST

*Bro. S. J. C. Baskaran*

All men are destined to die in this world. This is the reality of our history. But Jesus Christ was an exception to death because he rose on the third day after he died on the cross. He became victorious over death. All Christians believe in the resurrection of Jesus Christ. How ever there is an anxiety over the death, each one has to face in this world. No one knows the hour of death. What is after death is also uncertain for the human mind. But with the help of the Sacred Scripture we can know and believe in the next life.

Jesus Christ foretold His death and resurrection (Mk.8:31) There are many witnesses to attest to the resurrection of Jesus. He appeared several times to His disciples after His resurrection and strengthened them in their faith. (Mk.6:12-14; Lk.24:15–34; Jn.20:14-18)

St. Paul affirms strongly that the foundation of our faith is in the resurrection of Jesus Christ (1Cor. 15:13-14). Through His resurrection our mortal bodies will become incorruptible. Death has been defeated through His resurrection ( 1Cor .18:50)

The church professes the faith in the resurrection of Jesus Christ during the liturgical celebrations. Without the resurrection Jesus Christ cannot be true Son of God and Redeemer. Every Christian is called to partake in His resurrection through baptism. The uncertainty of next life is diminished through the resurrection of Jesus Christ.

# THE RISEN LORD IS THE CENTRE OF OUR LITURGY

**Mr. I. M. Jeyaseelan**

Through His passion, death and resurrection Jesus Christ redeemed the humankind from sin and death. He reconciled men with God. He wanted His salvific mission to reach everyone in this world. In order to fulfil this mission He chose the disciples and sent them to preach the good news to all. Consequently many believed and followed Jesus. The Christians express their faith through the liturgical celebrations. Liturgy is the source and summit of their faith. All the sacraments are meant for the nourishment of faith and to encounter the risen Lord.

Sacraments are visible signs of faith. Jesus Christ is the primodial sacrament because He is the source of all graces. The church became the sacrament of salvation through Jesus Christ. She continues the salvific mission of Jesus Christ through the preaching of the good news and celebration of the liturgy.

Eucharist is the centre of all the sacraments. The Christians are able to encounter Jesus Christ through the breaking of the bread. Likewise all the sacraments lead them to experience and encounter Jesus Christ. All the sacraments flow from the paschal mystery of Jesus Christ.

# குறுக்கெழுத்துப் போட்டி – இல.6

## முடிவுகள்

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. வழிகாட்டி
3. பாஞ்ஞோறியா
4. கன்னிகை
7. சிறுபடி
8. மரியா
9. அந்தோனியார்

**மேலிருந்து கீழ்**

1. வரலாறு
2. இஞ்ஞாசியார்
4. கற்பு
5. பகை
6. அன்று
7. ஆடி

### பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்

1ம் பரிசு : பி. டொலியின்
'நிலாவில்',
அல்வாய் வடமத்தி,
அல்வாய்.

2ம் பரிசு : ஏ. பி. றெமிக்கா
சென்.தோமஸ் ஒழுங்கை,
பருத்தித்துறை.

3ம் பரிசு : ஆ. பாமா
மாதா கோயில்,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

### சரியான விடை எழுதி பாராட்டுப் பெறுவோர்:

ஏ.எம்.மஞ்சுரிக்கா, கரவெட்டி; என்.அஜந்தா, ஏ. ஜக்குலின், அச்சுவேலி; யே. மரியா, பருத்தித்துறை; க. நிலோஜன், இளவாலை; திருமதி பி. மரியதாசன், யாழ்ப்பாணம்.

# குறுக்கெழுத்துப் போட்டி – இல.7


இடமிருந்து வலம்

1. இறைத்தியான நாட்களில் பலர் இதனை அனுபவித்தார்கள் (6)
5. இது ஒன்று மனிதம் ஆனது (4)
6. பூமி (2)
7. வாக்கியம் (குழம்பியுள்ளது) (4)
9. தீய ஆவிக்குரிய செயல் (குழம்பியுள்ளது) (6)
10. சங்கீதம் (6)

மேலிருந்து கீழ்

1. சிலர் இதுவாக கூடி விவிலியம் வாசிக்கிறார்கள் (2)
2. இறைவன் என்றும் இப்படியானவர் (5)
3. எமது இவைகள் அசையமுடியாத வரையிலும் காத்திருக்காமல் இன்றே மனிதத்தை வாழ்வோம் (குழம்பியுள்ளது) (6)
4. புனித பெரிய கிரகொரியார் சிறுவயதிலிருந்தே இதில் சிறந்து விளங்கினார் (குழம்பியுள்ளது) (3)
5. தூய ஆவியாருக்கும் இதற்கும் நெருங்கிய தொடர்புண்டு (2)
8. பழைய ஏற்பாட்டில் ஒரு அரசன் (3)
9. புதிய ஏற்பாட்டு நூல் ஒன்றை சுருக்கமாக இவ்வாறு கூறலாம் (தலைகீழாயுள்ளது) (2)

# குறுக்கெழுத்துப் போட்டி – இல.7




**அனுப்புபவரின் பெயர் :** ....................................................................

**விலாசம்** : ....................................................................

....................................................................

....................................................................

- விடைகள் டிசம்பர் 2001 இதழில் உள்ளன.
- விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக் குறிக்குள் உள்ள எண் குறிக்கும்.
- மேலுள்ள கூப்பனை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய இறுதிநாள் ஏப்ரல் 30, 2002.

முகவரி : குறுக்கெழுத்துப்போட்டி – இல. 7<br>
இறையியல் கோலங்கள்<br>
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி<br>
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்
ஆண்டு சந்தா (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 80/=
தனிப் பிரதி 25/=

தொடர்புகொள்க :-
''இறையியல் கோலங்கள்''
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

தொலைபேசி 021-2482

# IRAI IYAL KOLANGAL

*A Tamil Theological Quarterly*
*Annual subscription (Including Postage within Sri Lanka) Rs. 80/=*
*Single Copy 25/=*

*Subscription and Correspondence to :*

*Irai Iyal Kolangal*
*St. Francis Xavier's Seminary,*
*Columbuthurai,*
*Jaffna,*
*Sri Lanka.*

*Tel.No. 021-2482*

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம், இலங்கை 2002, ☎ 021-2378